Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

# இந்துசாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எகூ] பார்த்திபாஹ: குரோதிஞு புரட்டாதமீ உஉ வெள்ளிக்கிழமை (18 September. 1964) [இல-உ]

திருவியலூர் — உய்யவந்ததேவநாயனர் அருளிச்செய்த

## திருவுந்தியார்

### மூலமும் — உரையும்

[ சைவப்புலவர் திரு இ. செல்லத்துரை அவர்கள் ]

( முற்றொடர் - 8)

ஆக்கிலங் கேயுண்டா யல்லதங் கில்லையாய்ப்
பார்க்கிற் பரமதன் றுந்தீபற
பாவனைக் கெய்தாதென் றுந்தீபற. 9

கொ-கூ: (முன் உரைத்த ஆறு ஆதாரங்களிலே) ஆக்கில், அங்கே உண்டாய்; அல்லது, அங்கு இல்லையாய்; (ஆக்குமிடத்தும், விசாரித்துப்) பார்க்கில், அது பரம அன்று. (ஆதலால், அது) பாவனைக்கு எய்தாது; என்று உந்தீபற, உந்தீபற.

உரை: ஆக்கில் - மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களிலே (வைத்துத்) தியானிக்குமிடத்து;

அங்கே உண்டாய் - அவ்விடத்திலே உள்ளதாயும், அல்லது - அங்ஙனம் தியானியாத பொழுது, அங்கு இல்லையாய் - அவ்விடத்திலே இல்லையாயும், பார்க்கில் (அவ்விடத்தில் உளதாகியபொழுதும்) விசாரித்துப் பார்க்குமிடத்து, அது பரம அன்று - அது மேலான பொருளும் அல்லவாம். (ஆதலால்,) பாவனைக்கு எய்தாது - என்றும் நிலையான அப்பரம்பொருள் எமது (நிலையற்ற பசுஞான பாசஞான) பாவனைக்கு எட்டாத தன்மையை உடையது. என்று உந்தீபற; உந்தீபற - ...

விளக்கவுரை: (ஆதார யோகத்தில்) தியான நிட்டை கூடுதல் மாத்திரையானே பரம பொருளைப் பூரணமாய் அடைதல் கூடாது என்பது இச்செய்யுளால் உணர்த்தப்பட்டது. அதுபற்றி அவனைப் பூரணமாய் அடைந்து அநுபவித்தல், நிராதார யோகத்தனுலேயே உளதாம் என்பது உய்த்துணர வைக்கப்பட்டது.

இச்செய்யுளின் கருத்தை விளக்குமுகமாக, ஆதார யோகம் நிராதார யோகம் என்பவற்றைப்பற்றிக் கூறும் திருக்களிற்றுப்படியார்ச் செய்யுள்களும பழைய வுரையும் வருமாறு:

ஆக்கி ஒருபொருளா ஆதாரத் தப்பொருளை
நோக்கி அணுவில் அணுநெகிழப் — பார்க்கில்
இவனுகை தானெழிந்திட் டேகமாம் ஏகத்து)
அவனுகை ஆதார மாம். 23

"பிரபஞ்சத்திலே உண்டான விடயங்களை விசாரித்தறிந்து, இவையெல்லாம் பலபல வல்ல, மாயை யொன்றுமே; யென்று அன்னியமாக்கித் தன்னிலே தன்னை விளங்க விசாரித்தானுகில், நம்முடைய போதத்தினுலே சேவித்தோம் என்கிற தன்மை கெட்டுத், திருவருளோடே ஒன்றுவன். அப்படி ஒன்றுகிற தன்மையே ஆதாரமாம்.

இதனுள் ஆதார யோகத்துக்கு உபாயம் சொன்னது கண்டுகொள்க."

கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெய்யிற்
கொண்டதுவும் அப்பரிசே கூறுபடும் — கொண்ட
இருபொருளும் இன்றியே இன்னதிது வென்னுது
ஒருபொருளே யாயிருக்கும் உற்று. 24

"தான் பொருந்தப்பட்ட ஒப்பற்ற திருவருளைப் புதுமையுண்டாக நீக்கினுனுகில், திருவருளும வந்த முறையை விட்டு நீங்கும். அப்பால் பொருந்தின சிவனும் தானும இரண்டென்கிறதுமின்றி, இந்தக் கூட்டம இன்னது போல விருந்தது என்று சொல்ல படாமல் ஒரு பொருளாகப் பொருந்தியிருக்கும்.

இது தோழி கூட்டி அகலக், கூடி இன்புறும தலைவன் தலைவிபோல என்க."

(இச்செய்யுளானும், மேல்வரும் திருவுந்தியார்ச செய்யுள் 10, திருக்களிற்றுப்படியார்ச செய்யுள் 25, என்பவற்றானும் நிராதார யோகத்துக்கு உபாயம் சொன்னது கண்டுகொள்க.)

— [illegible]

## நற்சிந்தனை

(இல்வாழ்க்கை)

ஏனைய வறங்களினு
மேமாப் புடையதே
யினமில் லாவில் லறம். (2)

## பெரிய புராண விரிவுரைப் பூர்த்தி விழா

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (20-9-64) யாழ்ப்பாணம் வில்லூன்றி விநாயகராலயத்தில் பெரிய புராணப் படிப்பு வெள்ளணைச் சருக்கத்துடன் நிறைவெய்துகிறது. அன்று பெருமானுக்கு விசேட பூசையும், மகேசுர பூசையும் நடைபெறும, பெரியார் பலரது ஆசியுரையும், மணிபாகவதர் அவர்களது கதாப்பிரசங்கமும் இடம் பெறும்.

—

## இரேக்க தத்துவ ஞானம்

திரு. ஐ. தம்பிமுத்து B. A. (Lond) அரசகருமமொழி அலுவலகம்

(முற்றொடர் - 2)

சென்ற கட்டுரையில் இரேக்க தத்துவஞானத்திற்கு வித்திட்டவர்களான தேல்சு அனெக்சிமாண்டர், அனெக்சிமெனிசு ஆகிய மிலெற்றசு நாட்டுத் தத்துவ அறிஞர் மூவரும் மெய்ப்பொருள்பற்றிய கேள்விக்குப் பரம்பரையாக நிலவிவந்த விளக்கங்களை நிராகரித்துத் தாம் எவ்வாறு அதனைத் தீர்க்க முயன்றனரென்று அறிந்தோம். இம் மூவருக்குப்பின் தோன்றிய பெரிய இரேக்க தத்துவ அறிஞர் பைதகொரசு என்பவராவர். இவர் உலகத்தில் தோன்றிய பேரறிஞர்களில் ஒருவர். ஆனல் இவர் தமது கருத்துக்களை எழுதி வைத்தாரில்லை. எனவே இவருடையன வென்று எமக்குக் கிடைக்கும் கொள்கைகளில் எவ்வளவு உண்மையில் இவருடையன எவ்வளவு பின் சேர்க்கப்பட்டன என்று திட்டமாகக் கூறல் எமக்கு இடராகும். இவ்வாறான ஓர் இடரைச் சென்ற கட்டுரையில் தேல்சைப்பற்றிச் சிந்தித்தபொழுது கண்டோம். இன்னும் சோக்கிரதீசு என்னும் கிரேக்க தத்துவ அறிஞரைப் பற்றிச் சிந்திக்கின்றபொழுதும் காணபோம் இன்னும், பைதகொரசின் வாழ்க்கை வரலாறுபற்றிய தகவல்களுள்ளும் எது எது ஏற்கப்பாலது என்று தீர்த்துக்கொள்ளுதலும் இடராகும். ஏனெனில், இவரைப்பற்றி, எத்தனையோ வதந்திகள்பிறந்தன அவை ஒவ்வொன்றும் இவரை வெவ்வேறு மனிதனுகை எமக்கு எடுத்துரைக்கின்றன.

பைதகொரசு மிலெற்றசு நாட்டின் அயலிலுள்ள சாமோசு எனும் தீவைச் சேர்ந்தவர் சாமோசில நிலவிய ஆட்சியில் கொண்ட வெறுப்பினுல் அங்கிருந்து வெளியேறி இத்தாலி தேசத்தில் குடியேறினர் இத்தாலியில் குடியேற அங்கே சமயமும் விஞ்ஞானமும் ஒருங்கே வளர்ச்சி பெறுவதற்கிடமான ஒரு சபையை நிறுவினர். இச் சபையின் செயல்களில் பொருமையும் அவநம்பிக்கையும் மற்றவர்கள் கொண்டதனுல் எத்தனையோ இன்னல்கள் ஏற்பட்டன இவற்றிலிருந்து தப்பிக்கொள்வதற்காகப் பைதகொரசு இருந்த இடத்தையே விட்டு விலக வேண்டி நேர்ந்தது. இவருடைய காலத்தை வரையறையாகக் கூறமுடியாதபோதும் இவர் கி.மு. ஆறும் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார் என்று கொள்ளல் பிழையாகாது.

பைதகொரசு வைத்தியம், சங்கீதம், க்ஷேத்திர கணிதம் ஆகிய துறைகளில் பெரும் ஆராட்சி செய்து மனித இனத்துக்குப் பெரும் சேவை செய்ததுடன் காயத்தின் தளைகளிலிருந்து எம்மை விடுவித்துக்கொள்வதன் பொருட்டு

தொடர்ச்சி 3-ம் பக்கம்

உ

## வல்லிபுர ஆழ்வார் தோத்திரம்

( அளவையூர் — சஞ்சீவி )

நாகமணைத் தமர்ந்துவக்கும் நடனச் செல்வா
நற்கருடன் மிசையேறும் ஞானச் செல்வா
ஆகமதில் திருமகளை அமர்த்தும் செல்வா
அருட்சங்கு சக்கரங்கள் அமைந்த செல்வா
பாகமிரு கன்னிகையர் பயிலும் செல்வா
பஞ்சவர்க்குத் தூதான பகவச் செல்வா
மாகடலில் பள்ளிகொளும் மழலைச் செல்வா
வல்லிபுர ஆழ்வாராம் செல்வா போற்றி

இந்துசமயம்: ஜி. ஸி. ஈ

## மாதிரி வினு விடைகள்

[ ஆசிரியர் திரு ஆ. நவரத்தினம் அவர்கள் ]

[ சுருக்கமாக விடைதருக ]

1. இறைவன் எவ்வெவற்றுல தனக்கு ஒப்பிலாதவன்?

இறைவன் அளவிட முடியாதபெருமையினுலும், யாவராலும் அறிப்படாத நுண்மையினுலும், ஆன்மாக்களிடத்து வைத்துள்ள பெருங் கருணையினுலும், அவைகளால் அடைதற்கு அரிய தன்மையினுலும தனக்கு ஒப்பிலாதவன்.

2. மூவகைத் திருமேனிகள் எவை?

மூவகைத் திருமேனிகளாவன, அருவத் திருமேனி உருவத் திருமேனி அருவுருவத் திருமேனி என்பனவாம்.

3, சங்கரன் என்பதன் பொருள் யாது?

'சங்கரன்' என்பது சகல ஆன்மாக்களுக்கும் சுகத்தைச் செய்பவன் எனப் பொருள் படும். [சம் - சுகம்; கரன்- செய்பவன்]

4 வடிவாதி கன்மங்கள் எவை?

வடிவாதிகன்மங்களாவன, மாயாமல காரியங்களாகிய உடலும், மனம் முதலிய கருவிகளும், உலகமும், அனுபவிக்கப்படும் பொருள்களுமாகிய நான்குமாம்.

5. மெய்யிரண்டு மெவை?

ஞான மயமாயுள்ள அருளும், அவ்வருளே மானுடக் கோலந் தாங்கி அருள்புரிய வருகின்ற ஞானசாரிய வடிவும் ஆகிய இரண்டுமே மெய்யிரண்டுமாகும்.

தொடர்ச்சி 3ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ஸ்ரீ புரட்டாதிமீ
உ உ வெள்ளிக்கிழமை

## ஆலய நிலங்களும் வித்தியாசாலைகளும்

யாழ்ப்பாணத்திலுள்ள சில வித்தியாசாலைகள் ஆலயங்களுக்குரிய நிலங்களில் முற்காலத்தில் தாபிக்கப்பெற்றன கல்வியின் பயன் இறைவன் திருவடியை வணங்குதலாலும் வித்தியாசாலையின் விருத்தி ஆலயத்தின் விருத்திக்கு உபகாரமாயிருக்குமாதலாலும், ஆலயாதிகாரிகள் ஆலயங்களின் நிலங்களின் வித்தியாசாலைகளை நிறுவ உதவினர்கள். வித்தியாசாலைகளின் அதிகாரிகள் அவை தாபிக்கப்பெற்ற நிலங்களுக்குரிய குத்தகைப் பணத்தை ஆலய நிருவாகிகளுக்கு உதவினர்கள். அப்பணம் ஆலயங்களில் நடைபெற வேண்டிய நித்திய நைமித்திகங்களுக்கு உதவியாயிருந்தன. வித்தியாசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட பின்பு ஆலய நிலங்களுக்கு முன்னர் உதவப்பட்ட குத்தகைப் பணத்தை அரசாங்கம் உதவ மறுக்கின்றதென அறிகின்றேம். வித்தியாசாலைகளை நிறுவுதற்குத தேவையான நிலங்களை உதவிய கோயில்கள பெரும்பாலும் பொருள்வளமில்லாதவை. நிலங்களுக்குரிய குத்தகைப்பணத்தின் உதவியினுற்றான் அக்கோயில்களின் நித்திய நைமித்திகங்கள் முட்டின்றி நடைபெற்று வந்தன. அரசாங்கம் அக்கோயில்களுக்கு உதவவேண்டிய குததகைப் பணத்தைக கொடுக்க மறுப்பதினுலை அவற்றின் நித்தியநைமிததிகஙகள் கிரமமாக நடைபெற வழியில்லை.

"ஆற்றருநோய் மிகுமவனி
மழை குன்றும
போற்றரு மன்னரும்
போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக்
கோயிலக ளானவை
சாற்றிய பூசை
கடப்பிடிற்றுனே."

ஆலயங்களில் பூசைகள் கிரமமாக நடைபெறு விட்டால் நாட்டில் நோய்கள அதிகரிக்கும்; பருவ மழை பெய்யாது மன்னரும போர்வலி குறைவரெனத் திருமூலநாயனுரருளிச் செய்திருககின்றமையை நமமவர்கள் சிந்திக்ககடவர், இவ்விதமாக ஆலயங்களைப் புறககணிப்பதினுல் நாட்டுக்கு விளையுந் தீமைகளை அரசாங்கத்துக்கு நம்மவர்கள் எடுதது விளக்க வேண்டும்.

கல்வி விசாரணைச் சபையால் தயாரிக்கப்பட்ட வெள்ளையறிக்கை அண்மையில் பாராளுமன்றத்தில பரிசீலனை செய்யப்பட்டுக் கல்வி சமபந்தமாகப் புதிய சட்டங்கள் அமைக்கப்படுமெனவும அறிகின்றேம். அவ்விதமாகத்திருத்தங்கள் செய்யப்படும் காலத்தில் வித்தியாசாலைகள் நிறுவபபட்டிருக்கும ஆலய நிலங்களுக்குரிய குத்தகைப பணத்தை முன்போல் ஆலயங்களுக்கு உதவ ஒழுங்கு செய்ய, அல்லது குறிதத ஆலய நிலங்களைத் திரும்ப ஆலயங்களுக்கே உதவ ஒழுஙகு செய்யக கூடியதான நிபநதனைகள் மேற்படி திருத்தச் சட்டங்களில் சேர்க்க வேணடுமென நமமவர்கள் அரசாங்கத்தைக் கேட்க வேண்டும். யாழ்ப்பாணம சைவ பரிபாலன சபை 13-9-64-ல் நடைபெற்ற நிருவாக சபைககூட்டத்தில இவ் விஷயமாக ஒரு தீர்மானம நிறைவேற்றியிருக்கின்றது.

எங்கள் பாராளுமன்ற அங்கத்தவர்களும், சைவப் பிரமுகர்களும, சைவச் சபைகளும் வெள்ளையறிக்கை செய்யப்பட்டுச் சட்டத் திருத்தங்கள நிகழமுன் மேற்காட்டிய குறைகளை நிவர்த்தி செய்யுமவண்ணம் அரசாங்கத்தைக் கேட்டால் குறித்த ஆலயங்கள் பாதுகாககபபடும.

## 'அருட் கவிக்குப்' 'பாகவதர்' பட்டம் அளிப்பு

"பகவானுடைய புகழைப் பக்திரசம் பொருந்தப் பேசுபவர்களைப் 'பாகவதர்' என்று அழைப்பார்கள்; அப்படிப்பட்ட தகுதியும் சிறப்பும் பெற்ற ஒருவர் நல்லூர்க்கந்தன் திருவிழாக்காலத்திலே கந்தபுராணச்சிறப்புப்பற்றியும் முருகன் பெருமையைப்பற்றியும் பேசி வந்துள்ளார்கள்; இங்கே அருட்கவி விநாசிததமபி அவர்கள் எங்கள் எல்லோரையும் பக்திச்சுவையில் தேங்கச் செய்திருக்கிறுர்கள்; நிரம்ப அழகாக எல்லா அம்சமும் பொருந்தப் பிரசங்கம் செய்யும் இவரை— அருட்கவி விநாசித்தம்பி பாகவதர் என்றே இனி மேல் அழைப்போம"

இவ்வாறு ஈழநாடு ஆசிரியர் பிரம்மஸ்ரீ K. P. ஹரன் அவர்கள் கூறி "பாகவதர்" பட்டத்தை அளித்தனர். பல்லாயிரக்கணக்கான சைவ பெருமக்கள் நிறைந்திருந்த அச்சபையில் "அரோகரா" "முருகா" "கந்தா" "கார்த்திகேயா" என்று அடியவர்கள் ஆர்ப்பரிக்க — அன்பர்கள் கரகோஷம்செய்து வரவேற்க இப்பட்டமளிப்பு வைபவம இனிது நிகழ்ந்தது.

இவ்விழா நல்லூர்க்கந்தன் தீர்த்தத்திருவிழாவன்று இரவு நல்லூர்க் கந்தன் வடமேற்கு வீதியில் அமைக்கப்பட்டிருந்த "ஸ்ரீஸ்கந்தன்" தண்ணீர்ப்பந்தலில நடைபெற்றது.

ஷெ தண்ணீர்ப் பந்தலில் திருவிழாக்காலத்தில் தினந்தோறும சங்கீதகதாப்பிரசங்கம் செய்துவந்த 'அருட்கவி' சீ. விநாசித்தம்பி அவர்களுக்கும் தண்ணீர்ப்பந்தல்நிர்வாகிகளுக்கும பாராட்டுத் தெரிவிததுப் பல அன்பர்கள் பேசினுர்கள்,

காணி நீர்ப்பாசன இலாகா நிரந்தரக்காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் 'அருட்கவி' விநாசித்தம்பி பாகவதா அவர்களின் சமயத்தொண்டுகளையும் கவிபடைக்கும் புலமையையும் பாராட்டிப் பேசினுர்கள். அடுத்து, வித்துவான் க. கி. நடராசன் B. O. L அவர்கள் பேசும்போது, விநாசித்தம்பி பாகவதர் அவர்கள் கதாப்பிரசங்கமசெய்யும் ஆற்றலை வியந்ததோடு புராணக் கருத்துக்களின் நுணுக்கங்களை மக்கள் உள்ளத்தில் பதியச்செய்யும் திறமையையும பாராட்டுவதாகக் குறிப்பிட்டார்கள்.

சைவப்பிரசாரகர் திரு. வே. கந்தையா அவர்கள், ஆசிரியர் ம. பொன்னம்பலம் அவர்கள் ஆகியோரும் விநாசித்தம்பி பாகவதரைப் பாராட்டிப் பேசினுர்கள். ஈழ நாட்டுத் திருவள்ளுவர் சங்கக் காரியதரிசி திரு. மு பொன்னையா அவர்கள்சங்கச்சார்பில் பாகவதருக்குப் பரிசில்வழங்கினர்.

- நாயன்மார்கட்டு "நாதன்"

## இளைப்பாறும் ஆசிரியர் திரு. க. வயிரவநாதர் அவர்கள்

:0:

[திரு. க. கயிலாயநாதன், துணை அதிபர், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி]

ஈழத்துப்புலவர் பரம்பரையில் தோன்றிய சோமசுந்தரப்புலவர் வட்டுககோட்டை இந்துக்கல்லூரியில 40 ஆண்டுகளாக ஆசிரியராய் அமர்ந்து, செந்தமிழ் வளனும் சைவநெறி மணமும் பரப்பினர். 1938-ம் ஆண்டில் அவர் இளைப்பாறுதற்குமுன்னர், தாம செய்த தொண்டைத் தொடர்ந்து செய்ய வல்ல ஒரு வாரிசைத் தேர்ந்தெடுத்தலில் தலைப்பட்டார். அவ்வேளையில் உரும்பராய் இந்துக் கல்லூரியில் 9 ஆண்டுகளாய்ச் சீரிய சேவையில் ஈடுபட்டிருந்த திரு. க வயிரவநாதர் அவர்களை தகுந்தவரெனப் புலவர் கண்டனர். புலவர் தாமே திரு. க. வயிரவநாதரை நாடி, தாம் கற்பித்த கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும்படி அழைத்தனர்.

நல்லாசிரியரைத்தேடி மாணவன் செல்லும் இயல்புக்கு மாறாக, ஆசிரியரே மாணவனை நாடும் பேறு பெற்றவர். திரு. வயிரவநாதர், புலவரின் விருப்பத்தை நிறைவு செய்வதற்காக, அவர் கற்பித்த கல்லூரியில் திரு. வயிரவநாதர் 1938-ம் ஆண்டில் ஆசிரியராக அமர்ந்தார். உடையார் முன்னே இல்லை என போனறு, புலவரிடமிருந்து திரு. வயிரவநாதர் சைவ சித்தாந்த நூல்களை முறைப்படி கற்றனர். கற்றதோடு மாத்திரம் அமையாது, சமய உண்மைகளை மாணவர்களிடையும் பெற்றேர் மற்றேர் மத்தியிலும் பரப்பவேண்டுமென்று புலவர் அவாவினர். அவரின் வேண்டுகோளின்படி திரு. வயிரவநாதர், கல்லூரியில் சைவ இளைஞர் சங்கம் ஒன்றை நிறுவி, அதன் பாதுகாவலராகவும் பணியாற்றினுர். புலவரின் ஆர்வமும் திரு வயிரவநாதரின் அயரா உழைப்பும், பல சமய வகுப்புகளையும், கூட்டங்களையும் குருபூசைகளையும், மகாநாடுகளையும் திறம்பட நிகழ்த்தக் காரணமாயிருந்தன, அப்போது கல்லூரி அதிபராக இருந்த திரு. மு சபாரத்தினசிங்கம் அவர்களின் ஊக்கமும் ஆதரவும் பெருந் துணையாய் இருந்தது.

திரு. வயிரவநாதரின் சேவை கல்லூரியோடு மாத்திரம நின்று விடவில்லை. சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அரண் செய்வது கல்வி நிலையம் என்பதை உணர்ந்தவர் அவர். எனவே, கல்லூரியில் தாம் வகுத்துக்கொண்ட சைவ இளைஞர் சங்கத்தை இதற்குப் பயன்படுத்தினுர். மதுவிலக்குப் பிரசாரம், ஆலயங்களில் மிருகபலியை நிறுத்துதல ஆகிய தொண்டுகளில் ஈடுபட்டார். தமது ஊராகிய சங்கரத்தையில் எழுந்தருளியிருக்கும் பத்திரகாளி அம்மை ஆலயத்தில் மிருகபலியிடுவதைத் தீவிரமாக எதிர்த்தார் இதே பணிக்குத் தமமைத் தியாகம் செய்த வட்டுககோட்டை வாசிபும் பாரதியின் வழித் தோன்றலுமான வழக்கறிஞர் திரு. ச நாகலிங்கம் அவர்களோடு தொடர்பூண்டார். இப்போராட்டத்தில் தமது தலையையும் கொடுக்க திரு. வயிரவநாதர் தயங்கவில்லை. "எவ்வுயிர்க்கும் அன்பாயிரு", என்ற சைவ மதக் கட்டளையைத் தலைமேற்கொணடு, தமது ஊர் ஆலயத்தில் பலியை நிறுத்துவதில் வெற்றியும் கண்டார். வன்றெண்டர் வழிவந்த வயிரவநாதர் வாழ்த்துக்கு உரியவரல்லரோ!

சங்கரத்தையில் அறிவும், பண்பும் செழிக்கச் செய்தவர் திரு. வயிரவநாதர். அங்கேயுள்ள கிராம முன்னேற்றச் சங்கம், இந்து வாலிபர் சங்கம், மாதர் முன்னேற்றச்சங்கம், சனசமூக

தொடர்ச்சி 3-ம் பக்கம்

நேயர்கள் நெஞ்சம்

## கலா யோகி ஆனந்தக்குமாரசுவாமி ஞாபகமாக ஒரு கழகம் நிறுவுக

யாழ்ப்பாணம் அமெரிக்க கலாசாரத்தாபனத்தார்நடாத்திய ஸ்ரீ ஆனந்தகுமாரசுவாமி நினைவுக் கூட்டத்தில் அவரது படம் பொறிக்கப்பட்ட முத்திரைகளை அரசாங்கம் வெளியிடவேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது

திரு. நேசையா அவர்கள் பிறநாட்டு நூலகங்களில் இலங்கைபற்றிய புத்தகங்கள் மிகச் சொற்பமாயிருப்பதைக் குறிப்பிட்டு அவற்றில் ஆனந்த குமாரசுவாமி போன்ற பேரறிஞரின் நூல்கள் இடம் பெறவேண்டும எனக் குறிப்பிட்டார். நீதியரசர் திரு. தம்பையா அவர்கள் பிரமுகர்கள் குழு ஒன்று இக்கருமங்களில் ஊக்கமெடுக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்திய மறுமலர்ச்சிப்பணியில் முன்னின்று உழைத்த ஸ்ரீ அரவிந்தர், தாகூர் முதலிய அறிஞர்கள் பெயரால் தனித்தனிகழகங்கள்தோன்றி அவர்களது இலட்சியங்களை உலகெங்கும் பரப்ப முயலுகின்றன நம் கலாயோகி இந்திய - இலங்கைக் கலை மறுமலர்ச்சிககு ஆற்றிய தொண்டுகள் அவர்களது பணிக்குச் சற்றும் இளைத்தன அல்ல ஆனுல் நம்மவரின் ஊக்கக் குறைவால் கலாயோகியாரின் [illegible] பல ஆண்டுகட்கு முன் கொழும்பில "ஓலைநூற் பதிப்பகம்" என்றஸ்தாபனம் அவரது மூன்று கட்டுரைகளைக் "கிழக்கும் மேறகும்" என்ற பெயரில் வெளியிட்டது. கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் கலை பற்றிய தமது இரு நூல்களில் அவரதுகருததுக்களைத் தமிழ் படித்தோர் அறியச்செய்தார். ஆனுல மேற்கே அவர் நூல்கள் காலத்துக்குக்காலம்வெளியிடப்படுகின்றன. 1062ல் மின்னசொடா பல்கலைக்கழகததால் வெளியிடப்பட்ட "இலக்கியம் பற்றிய பாரம்பரியக் கொள்கை" என்ற நூல் பெருமபாலும் ஆனநதகுமாரசுவாமியின் நூல்களுள் காணப்பட்ட கருத்துக்களைத் தழுவியே எழுதப்பட்டது. அவர் ஈழ மாதாவின் புதல்வன் எனப் பெருமை பாராட்டும் நாம அவருக்கு ஆண்டுக்கொரு முறை விழாவெடுப்பதுடன் திருப்தியடைந்துவிடுகிறேம் உலகாயதம் பெருகி, மக்கள் "வரிசைநோக்கு" அற்று, மதிக்கத் தக்கது எது, தகாதது எது என அறியாது குருடர்களாய்ச் சென்றுகொண்டிருக்கும் உலகில் அறிஞர் குமாரசுவாமியின் கருத்துக்கள் ஒளிவிளக்குகளாய் அமைந்து பாதையைத் துலக்கும். அதற்குத் தம்மாலான பணிபுரிவது கலாசாரத்தை வளர்க்கும் அவாவுள்ள அறிஞர் கடன்

ஆனந்த குமாரசுவாமி சழகம் ஒன்று அமைதது அவரது கருததுக்களைப் பரப்பியும், நம்மவர் நம் கலாசாரத்தை மதிக்கப்பழகுதற்கு வழி வகுத்தும், ஒடுங்கிய அபிமானங்களை விட்டு அகில இந்திய கலாசாரத்தின் இரு அங்கங்களாகிய சிங்கள - தமிழ்க் கலாசாரங்கள் ஒருமித்து வளர்வதற்கு ஊக்கமளித்தும், கிழக்கு - மேற்கு ஒற்றுமையை வளர்த்தும், மனிதப் பண்புகள் மேலோங்குதற்கு அரும் பணியாற்றுதல் அறிஞர்கடன்.

ஆ. ச,
ஊர்காவற்றுறை.

## பாராட்டு விழா

உரும்பராய் இந்துக்கல்லூரியில் 9 ஆண்டுகளும், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் 27 ஆண்டுகளும் ஆசிரியராகப் பணியாற்றி செந்தமிழுக்கும், சைவத்திற்கும் சேவை செய்தவருமாகிய திரு. வைரவநாதர் அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்வதை முன்னிட்டு, அன்னுருக்கு ஒரு பாராட்டுவிழாநாளை (20-9-64) வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெறும. சைவ பரிபாலன சபைத் தலைவர் திரு த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பல அறிஞர்களின்சொற்பொழிவுகளும பிரம்மஸ்ரீ மணிபாகவதர் அவர்களின சங்கீதகதாப் பிரசங்கமும் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராணம் உரை வெளியீட்டு நிதி

நன்கொடையாகவும், சந்தாவாகவும் அளித்த அன்பர்களின் பெயர் விபரம்:

| | ரூ. ச. |
|---|---|
| முதலாம் சஞ்சிகையில் வெளிவந்த கணக்கின்படி | 1337-00 |
| திருவாளர்கள்: S. சின்னத்துரை, இணுவில் | 300-00 |
| ,, சி. முருகேசு, S. O அநுராதபுரம் | 100-00 |
| ,, M. கனகசபை, ஐ. வி. சங்கம், யாழ்ப்பாணம் | 25-00 |
| ,, A. நாகலிங்கம், யாழ்ப்பாணம் | 20-00 |
| ,, ச. பொன்னுச்சாமி, சராலை | 15 00 |
| ,, A. தனபாலசிங்கம், ஆனைப்பந்தி | 10-00 |
| ,, முதலியார், செ. முத்துத்தம்பி, J. P ஆனைப்பந்தி | 10-50 |
| ,, ம. ஸ்ரீகாந்தா, கொழும்பு | 10-00 |
| ,, முகாந்திரம், E. P. இராசையா, J P. யாழ்ப்பாணம் | 5-00 |
| ,, சிவஸ்ரீ. சு, குமாரசாமிக்குருக்கள், அச்சுவேலி | 5-00 |
| ,, S. சிவசுப்பிரமணியம், கொழும்பு | 5-00 |
| ,, பண்டிதர். இ. திருநாவுக்கரசு, இணுவில் | 4-00 |
| ,, A. W. மயில்வாகனம், கொழும்பு | 2-00 |
| சில்லறை விற்பனவு | 98-55 |
| | 1947-05 |

15-9-64-ம் திகதி வரையுமுள்ள
கந்தபுராணம் வரவு செலவுத் திட்டம்:

| | | ரூ ச. |
|---|---|---|
| நன்கொடையாகவும், சந்தாவாகவும். சில்லறையாகவும் உதவிய தொகை; | | 1947 05 |
| செலவு:— காகிதாதிகள் | 4-80 | |
| அச்சுக்கூலி | 1579-10 | |
| போக்குவரத்துசெலவு | 133-85 | |
| தபாற்செலவு | 34-20 | |
| நூலாசிரியருக்கு உதவிய பணம் | 100 00 | |
| சில்லறைச் செலவு | 17-85 | |
| யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதியில் | 77-25 | |
| | 1947 05 | 1947-05 |

க. வேலுப்பிள்ளை,
தனாதிகாரி,
கந்தபுராணவுரை வெளியீட்டுக்குழு.
சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

---

இவ்வாரம் 20-9-64 — 26-9-64

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

பண வரவு, தடை நீங்கும். தானிய விருத்தி. தந்தை வழி உறவினரால் தொந்தரவு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

நிம்மதிக் குறைவு, வேலைத் தொல்லை, தொழிலில் மாற்றம், உடன் பிறந்தாரால் உதவி.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

செலவு அதிகம், ஆனல் செலவுக்குப் பொருள் வரும். வீட்டுச் செயல்களில் துன்பம், கலகங்களுக்கு மூந்துவீர்,

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

ஞாயிறு. திங்கள் காலைவரை எச்சரிக்கை, எஞ்சிய காலம் தொழிலுக்கு ஏற்றது. நிம்மதிக் குறைவு, சுகக்குறைவு.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தேவையற்ற கண்டனங்கள் பணக்கஷ்டம். ஏமாற்றம், கிலங்களால் செலவு, திங்கள பிற்பகல், செவ்வாய், புதன் கவனம்.

**கன்னிராசி** உத்தரம் 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2 பாதம்.

பகைவர்க்குத் தோல்வி, கிலங்களால் நன்மை, குடும்பத்தில் அமைதி, சுகக்குறைவு, புதன் பிற்பகல், வியாழன், வெள்ளி எச்சரிக்கை.

**துலாம்,** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

வேலைக்கடுமை, பொருள் வரவு உட்பகைவர்களால் தொந்தரவு, நிம்மதி இரா, சுதந்திரம் பாதிக்கப்படும். வெள்ளி பிற்பகல், சனி காலை எச்சரிக்கை.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

வீட்டில் மகிழ்ச்சி, பழைய முதலீடுகளால் பயன், வேலைத் தொல்லை, தந்தையின் சுகக் குறையும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சுகக்குறைவு. குடும்பத்தில் தொந்தரவு. தொழில் வளர்ச்சி, உட்பகைவர்களில் எச்சரிக்கை, விவசாய விருத்தி.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

பொருள் அபிவிருத்தி. பகைவர்க்குத்தோல்வி, தவறான விளக்கங்களால் குடும்பத்தில் தொந்தரவு, புறங் கூறுபவர்களில் எச்சரிக்கை.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

தேக சுகத்தைப் பேணவும், வயிற்றுக்கோளாறு. பகைவர்க்குத் தோல்வி, பொருள் அபிவிருத்தி.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி. 1, 2, 3ம் பாதம்

நண்பர்களோடு தவறான விளக்கங்கள் நேரும், வீட்டுத்தொந்தரவு, செலவு அதிகம், சொந்தச் செயல்களில் கவனம்.

---

### இளைப்பாறும் ஆசிரியர் ... ....

2-ம் பக்கத் தொடர்ச்சி

நிலையம், ஐக்கிய பண்டகசாலைச் சங்கம், ஐக்கிய நாணய சங்கம் ஆகிய இயக்கங்களை நிர்வகித்து அனுபவித்தும் ஆக்கவேலைகளைச் செய்திருக்கின்றார். சுருங்கச் சொல்லின்,

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு".

என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்காக வாழ்பவர் திரு. வயிரவநாதர்.

சைவக்கல்லூரிகளில் நீண்ட காலமாகப் பணியாற்றி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் 27 ஆண்டுகள் சேவையில் இளைப்பாறவிருக்கும் திரு. வயிரவநாதர், வயிரமான நெஞ்சும் நீதி வழுவா நெறி முறையும் கொண்டவர் சைவ நீதியைப் போதனையிலும் சாதனையிலும் பின்பற்றும் இவ்வாசிரியர், பண்பாடும் சமயப்பற்றும் நிறைந்த பல மாணவர்களை உருவாக்கியுள்ளார். இம்மாதம் 20-ம்திகதி நடைபெறவிருக்கும் பகிரங்கப் பாராட்டு விழா இவருக்கு மகத்தான இவர்து ... மேன்மையின் ... [illegible]

---

## கிரேக்க தத்துவ ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாம் பல துறைகளிலும் ஈடுபட்டு அறிவைத்தேடவேண்டுமென்றுங் கற்பித்தார். இன்னும், இவர் ஆன்மாக்களின் மறுபிறப்புப் பற்றியும் போதித்து ஆன்மா அழிவற்றது, பூதவுடல் அழிந்து போக ஆன்மா, மறுபிறப்பெய்துகின்றது எனனும் இந்துத் தத்துவஞானக் கொள்கையுடன் ஒற்றுமை காட்டினர் பைதகொரசின் தத்துவக் கொள்கை, எண்களே உலகத்துச் சர்வத்தினதும் மெய்ப்பொருளைக் காணத் திறவுகோல்களாகும் எனும் அடிப்படையிலெழுந்தது. இது "பொருள்களெல்லாம் எண்கள்", என்ற கூற்றில் அடங்கும் இக்கொள்கையின்படி எண்களின் அலகுகள் பரமனுடைய பௌதிகப் புள்ளிகள் அல்லது குறறுகள் என்று கருதப்படுகின்றன. இவ்வாறான எண்களைக் கொண்டு கேத்திர கணித உருவங்களை அமைத்துக்கொள்ளலாம். எனவே உலகத்தில் நாம் காணும் பலவேறு பொருள்களெல்லாம் அமைபுகளாகும் இவ்வமைபுகள் அனைத்தும் ஒற்றையெண்களினதும் இரட்டையெண்களினதும் பல்வேறு சேர்க்கைகள்மூலம் பாகுபாடற்ற முதல நிலைப்பொருளான காற்றுக்கு அல்லது இடத்திற்கு வடிவங்கள் கொடுக்கின்றனவாகும். இங்ஙனம் எண்கள், எல்லை அல்லது வரம்பும் வடிவும் அற்றமுதற்பொருளுக்கு எல்லை அல்லது வடிவம் வழங்குகின்றன என்று கருதல்கூடும், பைதகொரசின் இவ்வெண்கொள்கை இவர் சங்கீதத்தில் விகிதசமத்தின், அதாவது 'இடை' என்பதின் முக்கியத்துவத்தைக் கண்டுபிடித்ததின் பயனாய்ப் பிறந்ததாகும். பைதகொரசின் அண்டவியலின்படி நாம் வசிக்கும் புவி அண்டகோளத்தின் மத்தியிலுள்ளதாகாது: அது ஒரு மையத்திலுள்ள தீயைச் சுற்றிச் சுழலும் வான் பொருள்களுள் ஒன்றாகும். வான பொருள்களுக்கும் மையத் தீக்குமுள்ள இடைத் தூரங்கள் ஒரு இசை வரிசையில் சுர இடைகளை ஒத்தனவாகும்.

மேலே முதல் நிலைப்பொருள் அல்லது மெய்ப் பொருள்பற்றிய கொள்கையில் பைதகொரசு எவ்வாறு மிலற்றசுத் தத்துவ ஞானத்தைக் கடைப் பிடித்தார் என்று கண்டோம். அவ்வாறே பைதகொரசின் கருத்துக்களையும் பின்தோன்றிய தத்துவ அறிஞர் கடைப்பிடித்தனர். "பிளேற்றோவின்கருத்துலகம், மெய்யுலகின் அடிப்படையுள்ளது எண் எனும் பைதகொரசின் கொள்கையின் திருத்தமாகும்" என்றுஉவைற்கெட் என்ற அறிஞர் கூறியிருக்கின்றார்.

(தொடரும்)

---

## பெரிய புராணப் பூர்த்திப் படிப்பு

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால நாவலர் மண்டபத்தில் நடத்தப்பட்டு வந்த பெரிய புராணபடனத்தின் பூர்த்திப்படிப்பு புரட்டாதிமீ ௪௨ (20-9-64) ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும்

**நிகழ்ச்சிகள்:**

முற்பகல்: 10 மணி — பிற்பகல்: 1 மணி

சிவபூஜா மண்டபத்தில், சிவப்பிராமணர் சிவபூசை.

நாவலர் மண்டபத்தில், சிவப்பிராமணர் ஆசிர்வாதம்.
சமாராதனையும், மாகேஸ்வர பூசையும்.

இரவு: 7 மணி தொடக்கம்:—

பெரிய புராணம், "வெள்ளானைச்சருக்கம்"
படித்துப் பயன் சொல்லப்படும்.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம் 14-9-64. — மு. மயில்வாகனம், சமயப்பிரசார அமைச்சர்.

J. 205 18-9-64

---

## சிவகாமசுந்தரி இறைவனடி சேர்ந்தார்

ஈழத்து மாபெரும் அரசியல் வாதியும், தத்துவ ஞானியுமாகிய சேர் பொன் இராமநாதன் அவர்களின் புதல்வியும், செனெற்றர் சு நடேசபிள்ளை அவர்களின் வாழ்க்கைத் துணைவியுமாகிய சிவகாமசுந்தரி 15-9 64 காலை 10 30 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்

இவர் பண்பே உருவானவர். இந்தியாவில் இசைப் பட்டம் பெற்றவர் இராமநாதன் கல்லூரியின் முகாமையாளராகக் கடமையாற்றியவர். அக்கல்லூரி வளர்ச்சிக்குத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர் அக்கல்லூரி மாணவிகளின் அன்பைப் பெற்றவர். எல்லாவற்றிற்கும் மேலாக "38 ஆண்டுகளாக நடைபெற்ற எங்கள் இல்வாழ்வில் அவர் ஒரு நாளும் முகம் சுளித்ததில்லை என் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசியதுமில்லை" என்று திரு சு. நடேசபிள்ளை அவர்கள் மனங்கலங்கிக் கூறுமளவிற்கு அவர் இதயத்தில் இடம்பெற்று இலவாழ்வை ஒழுங்காக நடத்தியவர்.

இத்தகைய சிறப்புவாய்ந்த ஒருவரை இழந்து தவிக்கும் இராமநாதன் கல்லூரி மாணவிகளுக்கும், செனற்றர் சு நடேசபிள்ளை அவர்களுக்கும் எங்கள் மனங்கலந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### தேகவியோகம்

அட்பர் பலாங்கொடைத் தோட்டத்தின் நிருவாகியாகக் கடமையாற்றி அந்திய காலத்தில் கோப்பாயில் வசித்துவந்த திரு ஆர். கந்தையா ஜே. பி. அவர்கள் 13-9-64 ல் அன்று தமது வாசத்தலத்தில் சிவபதமடைந்தனர். அவர் பரோபகார சிந்தையும் கடவுள் பக்தியும், தமிழ்மொழிப் பற்றும், சைவசமயப் பற்றும் நிறைந்தவர். சைவத்தாபனங்களுக்கு ஏராளமான பொருள் உபகரித்தவர். அவருடைய பாரியார் ஸ்ரீமதி. நல்லம்மாவாவர். காலஞ் சென்ற திரு ஆர். ஆசைப்பிள்ளைக்குச் சகோதரர். வல்வெட்டி ஓய்வு பெற்ற அப்போதிக்கரி காலஞ் சென்ற அருளம்பலம் அவர்களுக்கு மைத்துனர். வடக்கறிஞர் ஆர். சீ. சுப்பிரமணியம், திரு சீ. முருகேசு, திரு. சீ. சிவசிதம்பரம், திரு. சீ. கனகசபை ஆகிய நால்வரும் அவருடைய புதிரர்கள். திரு வி கே. ஞானசுந்தரம், திரு. வி குலநாயகம், திரு. எஸ். விஜயபாதினம், திரு. ரீ. அருணாசலம் திரு, எஸ். ஆர். அருளம்பலம், திரு. எஸ் சிவசிதம்பரம் ஆகியவர்களுக்கு மாமனர்.

அவர் பிரிவைக்குறித்து, துன்புறும் சுற்றத்தவர்களுக்கு எங்கள் அநுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

---

### (இந்துசமயம்) மாதிரி வினுவிடை

1-ம் பக்கத் தொடர்ச்சி

**6.** நயனதீட்சையாவதுயாது?

சிவசொரூபமாயுள்ள ஞானசாரியன், பக்குவமுள்ள சீடனையும் சிவத்தன்மை யடையும் பொருட்டு, தன் அருட்பார்வையால் பார்த்து, அவனிடமுள்ள மலங்களைப் போக்க, அருளைச்செய்கின்ற முறைமையே நயன தீட்சையாகும்.

**7.** இருவினை யொப்பாவது யாது?

நல்வினை தீவினை என்னும் இருவினைகளும் பிறவிக்குக் காரணம் என்னும் எண்ணம் ஆன்மாவுக்கு உண்டாகி, அவ்விரண்டையும் ஒப்பநாடி வெறுத்துவிடுதலே இருவினையொப்பாகும். நல்வினை செய்வதில் விருப்பும் தீவினை செய்வதில் வெறுப்புமில்லாத பற்றற்ற நிலையாகும்.

**8** அநாதியான ஆறு பொருட்களு மேவை?

முதல்வனுகிய இறைவனும், பலவாகிய ஆன்மாக்களும், ஆணவ மலமும், கன்ம மலமும், சுத்தமாயை அசுத்தமாயை என்னும் இருவகை மாயைப்பொருட்களும் அநாதியான ஆறுபொருட்களாகும்.

**9.** ஆன்மாவை வந்தடையும் வீண் பாவமேது?

ஆன்மாவுக்கு ஆணவ மலத்தை நீக்கித் திருவருளானது தன்னைக் காட்டியபோதும், அவ்வான்மாவானது தற்செருக்கால், அத் திருவருளையும அது காட்டும உண்மையையும் "நானே கண்டேன்" என்று நினைக்கின்ற நினைப்பே ஆன்மாவை வந்தடையும் வீண் பாவமாகும்.

**10.** அருளார் நிலை யாது?

திருவருள் துணையே துணையாகக் கொண்டு, அத் திருவருளை முன்னிட்டு அது காட்டும் முறையிலே தாம் பின்னுகச் செல்லுகின்ற செல்கையே அருளார் நிலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

199/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
வழக்கு இல. M B 4750

V. D. செல்லையாவின்
மகள் புஷ்பதேவி
வழக்காளி

எதிராக

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நடேச அழகராசா
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 4750ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1964 வருடம் ஐப்பசி மாதம் 24 ந் திகதி (24-10-64) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 7500-ம் 10-4-62 தொடக்கம் 2-10-62 வரைக்கும் ரூபா 6000 க்கு 12 வீத வட்டியும், அதன் பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபா 285-55 சதமும். இவற்றில் ரூபா 580 இறுபட்டுள்ளது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்குஇறை "திமிலமென்றுப்புளியடி" நிலப்பரப்பு 2 குளி 1 7/8 வீடும் கடை அறையும் செய்பயிர் வான்பயிர்களும். கிழக்கிலுள்ள கிணற்றில் அரைப்பங்கும் வழி வாய்க்கால் உரிமையும். எல்லை கிழக்கு எலாட்டி ராசக்குட்டியின் உரிமையாளரின் ஆதனம வடக்கு றோமன் கத்தோலிக்க ஆரோக்கிய மாதா கோவிலுக்குரிய ஆதனம். மேற்கு கஸ்தூரியார் வீதியும் கணபதி செல்லப்பாவின் ஆதனமும். தெற்கு பொன்னர் சின்னராசாவின் ஆதனமும் கை ஒழுங்கை முகப்புப நாகன் சுப்பையாவின் ஆதனமும், D 275/93 ல் பதியப்பட்டது

துபாற்கத்தோரடி,
சுவாலி, மானிப்பாய்,
16-9-64.
M 113 24-7-64,

செ. பாண்டித்துரை,
கொமிஷனர், விலைமதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
Commissioner of Sales Valuer,
& Licensed Auctioneer.

M 166 18-9-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B, 5179,
யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

காரைநகர் வடக்கு
கந்தையா நவரத்தினம்
—வழக்காளி

எதிராக

காரைநகர் மேற்கு, காரைநகர்
1. கணபதிப்பிள்ளை வயித்தி லிங்கம் தானுகவும் சென்ற கணபதிப்பிள்ளை கைம் பெண் அமராபதி பிரதி நிதியாகவும்
2. பெண் சின்னம்மாவும், காரைநகர் மேற்கு
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B, 5179-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1964-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ம் திகதி (7-11-64) சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3440/- சதம் 50. இன்னும் ரூபா 2000-க்கு 24-10-62 தொடக்கம் 21-5-63 வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 304/- சதம் 97½. அத்துடன் கொமிஷன் முத்திரை ரூபா 9/-

1964-ம் ஆண்டு ஆனி மாதம் 23-ம் திகதி பெரிய கோட்டில் இவ்வழக்கில் விற்பனவில், 5-ம் விற்பனவு நிபந்தனையின் சரத்துப்படி வாங்கிய தொகையில் நாலில் ஒரு பங்கு ரூபா 1125/- தனை தண்டமாக்கப்பட்டது.

காணிகள் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோயிற்பற்று தங்கோடை இறை "கலவியத்தோட்டம்" பர. கில. இலா. 17. பனைகளும் வடலிகளும், எல்லை கிழக்கு கனகசுந்தரம் பெண் பாறுவதிப்பிள்ளையினதும் ஒழுங்கையும், வடக்கு இராமலிங்கம் கல்லதம்பியின் உரிமைக்காரரின் ஆதனம், மேற்கு முதலாம் எதிரிக்குரிய ஆதனம், தெற்கு சிவசம்பு கைம்பெண் நாகம்மாவினுதனம். இதடங்கலும் மூற்பதிவு C 161/142.

2. டை இறை "போசிட்டி" பர. கில, இலா. 20. பனை மரங்கள், வடலிகள், வேம்பு, கல்வீடு, குசினி, தலைவாசல், கிணறும். எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கைம்பெண் இராசம்மாவினுதனம், வடக்கு ஒழுக்கை, மேற்கு றோட்டும் சுவசிவாயம் பெண் தெய்வானைப்பிள்ளையினுதனம், தெற்கு ஒழுங்கையும் கந்தையா சொக்கலிங்கத்தினுதனமும், இதிற் சொரியலாய் 2/3 பங்கும் அதைச் சேர்ந்தவைகளும ஆனால் இதற்குப் பிறநீங்கலாக வீடும் குசினியும் தலைவாசலும் இப்பங்குக்கு உரியவை. குறித்த கிணற்றில் கிழக்கெல்லைக்காணிக்குரிய அரைவாசிப்பங்கு புலநீங்கல். மூற்பதிவு: C 290/41,

தா. செல்லையா,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
இல: 37. கொழும்புத்துறைவீதி
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்
M. 161 18-9-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மீசாலை தெற்கு
1. பொன்னையா மாணிக்கம்
2. பெண் காசிப்பிள்ளை
—வழக்காளிகள்

இல. 2677

எதிராக

சாவகச்சேரி வடக்கு,
தற்போது குஞ்சுப்பரந்தன்
பரந்தன், செல்லமுத்து சதாசிவம்
- எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 2677-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1964-ம் ஆண்டு அட்டோபர் (ஐப்பசி) மாதம் 10-ம் திகதி (10-10-64) சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1883-30-ம், முதல் ரூபாய் 1000-க்கு 16-5-63 திகதி தொடக்கம் 3-10-63 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 199-28 சதம். மொத்தம ரூபா 2231 05 சதம்,

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கராச்சிப்பகுதி கராச்சிக் கோவிற்பற்று குஞ்சுப்பரந்தனிறை "புதுக்காடு" என்ற பரப்பு 200. இதில வாய்க்காலுக்கு விடப்பட்ட நெற்பரப்பு 25 நீக்கி மீதி நெற்பரப்பு 175. இதில் வாய்க்காலுக்கு கிழக்கே நெற்பரப்பு 75, இந்த நெற்பரப்பு 75-க்கு எல்லை கிழக்கு பொன்னையா கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு கெருடாவில் கந்தசுவாமி கோவில்ஆதனம். மேற்கு வாய்க்கால தெற்கு றோட்டு இதில் சொரியலாய் அரைவாசி (½) மூற்பதவு B 33/180

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer.
Licensed Auctioneer.
தெல்லிப்பழை 22-8-1964.
M 163 18-9-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி தற்போது சிலாபம்
1 நாகலிங்கம் இராமச்சந்திரன்
2. பெண் சுகிர்தராணி
வழக்காளிகள்

எதிராக

இல. 2654
சாவகச்சேரி 1 நாகன் சின்னத் தம்பி அல்லது சின்னப்பொடியன்
2. பெண் ஆச்சிக்குட்டி
-எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் 2654ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகளை 1964ம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி) மாதம் 24ம் திகதி (24-10-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 9737-50ம், இதில் ரூபா 7500-க்கு 9-4-63 திகதி தொடக்கம் 22-8-63 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 280-95 சதம் இதில் கோட்டுச் செலவில் ரூபா 100 இறுபட்டது மிகுதி மொத்தம் ரூபா 10,838-40 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரியிறை "விப்புற்றடியும் மஞ்சல மரத்தடியும்" நிலப்பரப்பு 22 3/8. இதில் அரைவாசிக்கு தெற்குப்பக்கமாக நிலப்பரப்பு 11 3/16 ம் பனைகள் வேம்புகளும் மற்றும்பயிர்களும எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு கட்டையன் கணபதியின் ஆதனம். மேற்கு கந்தர் சுப்பையாவின் ஆதனம, தெற்கு முதலாம எதிராளியின் ஆதனம். இதடங்கலும் மூற்பதவு F 110/189.

2. மேற்படி சாவகச்சேரியிறை "மஞ்சலமரத்தடி" நிலப்பரப்பு (3) மூன்றும பயிர்களும எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை. வடக்கு மேலே குறிக்கப்பட்டிருக்கும் 1ம் ஆதனம். மேற்கு முதலாம் எதிராளியின் ஆதனம், இதடங்கலும் மூற்பதிவு F 309/278

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner, Valuer,
& Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 29-8-1964.
M. 162 18-9-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

வலிகாமம கிழக்கு. ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம், தற்பொழுது ஆவரங்கால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். —வழக்காளி

இல. M.B. 3909.

எதிராக

காலஞ்சென்ற புத்தூர் மேற்கு கந்தர் தம்பையா —எதிராளி.

காலஞ்சென்ற எதிராளியின் கோட்டுப் பிரதிநிதி, புத்தூர் மேற்கு கந்தர் தம்பையா மகள் தங்கம்மா.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 3909-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் என்னால் 1964-ம்ஞு ஐப்பசிமீ 21-ம் புதன்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தந்தக் காணக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 795-ம். ரூபா 735/82-க்கு 21-2-61 தொடக்கம் 16-10-63 வரை 4 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 238/87½ சதம்.

காணிகளின் விபரம்:

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க்கோயிற்பற்று புத்தூர் தெற்கிறை "இளந்தோப்பு" பர.கில இலா. நாலரை (பர, கில இலா, 4½) வீடும செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு சின்னப்பு கைம்பெண் சின்னட்டிபிள்ளையின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு ... உரித்தாளரினுதனம், தெற்கு கந்தர் தம்பையாவினுதனம். இதடங்கலி சொரியலாய் பர. நீ. இலா, ஒன்றே முக்கால் (பர. கில, இலா, 1¾).

2. டை புத்தூர் தெற்கிறை "உவைகெம்பறை" பர, கெ.நீ. இலா 15 ஆனால் இப்பொழுது பர. நீ இலா. பதினைந்து (பர, நீ இலா. 15) எல்லை கிழக்கு சின்னத்தம்பி பொன்னையாவிற்குரியவாதனம், வடக்கு சின்னத்தம்பி கந்தையாவிற்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், மேற்கு செல்லப்பா சுபண வள்ளிப்பிள்ளைக்குரியவாதனம், தெற்கு சின்னப்பா தம்புவிற்குரியவாதனம், இதடங்கலும்.

3. டை புத்தூர் தெற்கிறை "இலந்தோப்பு" பர. நீ. இலா. ஐந்தேமுக்கால (பர நீ இலா. 5¾) செய்பயிர் வான்பயிர்களும எல்லை கிழக்கு சின்னப்பா பெண் சின்னப்பிள்ளைக்குரியவாதனம் வடக்கு கந்தர் மகள் பாறுபதிக்குரியவாதனம், மேற்கு சின்னத்தம்பி பெண் தங்கப்பிள்ளைக்குரிய வாதனம், தெற்கு வயிரவனுதர் இராமலிங்கத்துற்குரிய வாதனம் இதடங்கலிற் சொரியலாயரைவாசி.

வை ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்,
காரைநகர்,
1964-ம்ஞு புரட்டாதிமீ 8-ம்உ
M. 165 18-9-

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சிதம்பரவேலு சபாரெட்டினம், தெல்லிப்பழை தற்போது இல 60/17 நடராஜா பிளேஸ் ... வெலவிலை —வழக்காளி

இல M.B. 3952.

எதிராக

தையிட்டி
1. கணபதிப்பிள்ளை கைம்பெண் செல்லமுத்து
2 கணபதிப்பிள்ளை துரை
எதிராளிகள்

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M.B, 3952-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணி 1964-ம்ஞு கார்த்திகைமீ 1- சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம அந்தந்த காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 4 4 -ம 13-3-61 தொடக்கம் 5-9-61 வரைக்கும் ரூபாய் 3000-க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு அதாவது செலவளித்த செலவு ரூபா 146 சதம் 25, வெலியாத்துச் செலவு ரூபா 38 சதம் 90, அத்துடன் கோட்டுச் செலவு ரூபா 26 சதம் 45, இதில் ரூபாய் 3500 கட்டுப்பட்டுவிட்டது இதில் கோட்டுச்செலவு ரூபா 150கொடுபட்டுஇருக்கிறது.

ஆதன விபரம:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக மயிலிட்டிக் கோயிற்பற்று தையிட்டி இறை 'தினலப்பாய்' என்னும் காணி நில, பரப்பு 3-ம 10 1/3 குளியும், இதில் பனை மரங்களும் தாமாய உண்டான செய்பயிர் வான்பயிரும், தெற்குப்பக்கத்தில இருக்கும் காசியர் கந்தையாவின் ஆதனத்துக்கு வடது பக்கத்தல வழி வாய்க்காலும் உண்டு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு ஒழுங்கை, மேற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் தெய்வானையும், ரசிங்கர் செல்லப்பவின் ஆதனமும், தெற்கு காசியர் கந்தையாவும மற்றவர்களின் ஆதனமும உண்டு.

2. மேற்படி கூறிய கோயிற்பற்றும் இறையும் "தொங்கலபாய" என்னும் காணி நிலப்பரப்பு 4-ம 8 குளியும், இதில் தென்னை மரங்களும, பனைமரங்களும், வடக்குப்பகுதியில் இருக்கும கிணற்றில் அரைப்பங்கும், முன் கூறிய தையிட்டியில இருக்கும முதற்காணிக்கு அருகில வழியும் உண்டு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு காசியர் கந்தையாவும மற்றவர்களும மேற்கு சின்னத்துரை மனைவி சிவபாக்கியத்தின ஆதனமும், தெற்கு ஒழுக்கையும உண்டு.

3. மேற்படி கூறிய கோயிற்பற்றும் இறையும் "அம்பத்து" என்னும காணி நிலப்பரப்பு 6½ இதில் பனைமரங்களும தெற்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் அரைப்பங்கும் உண்டு. எல்லை கிழக்கு ரசிங்கர் வேலுப்பிள்ளையும், வடக்கு ஒழுங்கை, மேற்கும் தெற்கும் புருகுட்பிள்ளை செனுச்சியின் ஆதனமும் உண்டு. இதில பிரிக்கப்படாத அரைப் பங்கு.

இ கனகரெத்தினம்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
கம்-35 கொழும்புத்துறைவீதி
கண்டிகுளி, யாழ்ப்பாணம்.
M 164 18-9-64

## கோட்டு விற்னவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
மாவட்டக் கோட்டில்
கே. சி. மார்கண்டு,
சங்கானை மேற்கு —வழக்காளி

எதிராக

இல M B 5856
கணபதிப்பிள்ளை தம்பிராஜா, வட்டுக்கோட்டை மேற்கு (தானுகவும் தன. பெண்சாதி பதமணிதேவியினுதனங்களுக்குச் சட்டரீதியான தத்துவகாரனுகவும்) —எதிராளி.

யாழ்ப்பாண மாவட்டக்கோட்டின் M B 5856ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1964ம் ஆ அக்டோபர் மாதம் 31 ந் திகதி (31-10-64) சனிக்கிழமை மூற்பகல் 9-30 மணி தொடக்கம் அவ்வாதனங்களுள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

முதலும் வட்டியுமாக 10,860 ரூபாவும், 5-7-63 தொடக்கம் 22-4-64 வரைக்குப் 6000 ரூபாவிற்கு வருஷமொன்றுக்கு நூற்றிற்கு ஒன்பது வீத வட்டியும் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 22-4-64 தொடக்கம் முழுத் தொகை இறுக்கும் வரைக்கும் வருஷமொன்றிற்கு நூற்றிற்கு ஐந்துவீத வட்டியும் செலவும் ரூபா 423/99 சதம். (ஏற்பட்ட செலவு ரூபா 327-15 சதம். வெலியாத்துச்செலவு ரூபா 63/32 சதம். இனிமேல் ஏற்படுஞ்செலவு ரூபா 33/52 சதம்)

முதலாவது ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை யிறை வட்டுக்கோட்டை கிழக்கு "எமப்பன்றிக கலட்டி" பரப்பு கில. லா 10 குழிகள் 13, எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு குமலிங்கம் சின்னத்தம்பியினுதனம், மேற்கு றோட்டு, தெற்கு சிற்றம்பலம் குமாரசாமியினுதனம், இதுமுழுவதும். யாழ்ப்பாணம் பதிவுஇலக்கம் E 04/231.

இரண்டாவது ஆதனடாப்பு

1951 ம் ஆ வைகாசி மாதம் 20 ந் திகதி (20-5-51) பிரசித்த நொத்தாரிசு என். ஏகாம்பரம் முகதாவில் 1152 ம் இலக்கத்தில் முடிந்த ஈட்டுக் கடனின் முதலும் வட்டியுஞ் சேர்ந்த தொகையில் சகல நயமுரித்துச் சோத்தை முழுவதும் அதனால் பாதிக்கப்பட்ட பின்னால்விபரிக்கப்படும் ஆதனங்களில் முழு உருத்தும்.

(அ) டை யிறைவட்டுக்கோட்டை மேற்கு சிறுத்துவத்தை" பரப்பு கில. லா, 3¾, கல் வீடும், தலைவாசல், குசினியும் செய் பயிர் வான்பயிர்களும் எல்லைகிழக்கும் தெற்கும் சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளையி னுருமைக்காரருக்கு உரிய ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுக்கை. இது முழுவதும் யாழ்ப்பாணம் பதிவு இலக்கம் E 369/69.

(ஆ) டை யிறை வட்டுக்கோட்டை மேற்கு 'சிறுத்துவத்தை' பரப்பு கில லா, 11½ இதில் சொரியலாய் பரப்பு கில லா, 3¼. எல்லைகிழக்கு கந்தப்பு கிருஷ்ணர் பெண் தனலட்சுமியினுதனம், வடக்கு ஒழுங்கையும், கந்தப்பு கணபதிப்பிள்ளை கைம்பெண் தெய்வானைப்பிள்ளையி னுதனம், மேற்கு கந்தப்பர் கணபதிப்பிள்ளையினுதனமும் ஒழுங்கையும், தெற்கு தற்பரானந்தம் பெண் பறுபதத்தினுதனம். யாழ்ப்பாணம் பதவு இல E 305/258.

க. பொன்னுத்துரை
கொம்மிஷனர்,
"அகிலகம்" 28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்,
M 160 18-9-64

... வண்ணை சைவப்பிரகாச ... 150-ம் ... அச்சியந்திரசாலையில் 18-9-1964 ... வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org